232

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாஸாந்திரப் பத்திரிகை.

வாலியம் 13] 1919-ஞு ஜூலை & ஆகஸ்டுமீ [நெ. 7 & 8.

MONTHLY JOURNAL OF 8 PAGES

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A., and Mr. A. Subramania Iyer, B. A.

Annual Subscription is One Rupee. Post Free.

தஞ்சாவூர் ஜில்லா நஞ்சை நிலங்களுக்கு ஏற்றதாக செய்யப்பட்ட

சிறந்த கலவை உரம்.

சென்ற வருஷம் எப்பொழுதும் இல்லாதபடி நம்முடைய ராஜதானி பூராவிலும் மழை குறைந்துபோய் விட்டதும் அதனால் வெள்ளாமை விளைச்சல் விசேஷமாய் குறைந்துவிட்டதும் எல்லாரும் அறிவார்கள். மழைவிட்டும் தூவானம்விடவில்லை யென்பதுபோல் சண்டை ஒழிந்து சமாதானம் ஆகியும் நீண்டகாலம் நடந்த யுத்தத்தினால், விவசாயம் வியாபாரம் முதலிய எத்தொழிலும் கட்டுக்கெட்டுத் தடுமாறிப் போயிருக்கிறதும், அது காலக்கிரமத்தில்தான் முன்னிலைமைக்கு வருமென்பதும் தெரியும். இதனால் உணவுப்பொருள்கள் எல்லாவற்றிற்கும் அதிலும் தான்யத்திற்கு கடும்பஞ்சம் இருந்துவருகிறது. இதை நிவர்த்திக்குப்பொருட்டு ஸர்க்காரில் பலவிதமான உதவிசெய்து வருகிறார்கள். அதிக விஸ்தீர்ணம் ஸாகுபடிக்குவேண்டிய வசதிகளும் செய்துகொடுத்து விவசாயம் விருத்தியாவதற்கு வேண்டிய வழிகளை, கவர்ன்மெண்டார் அன்போடு செய்துவருகிறார்கள். விவசாய டிபார்ட்டுமெண்டு மூலமாக தஞ்சாவூர் ஜில்லாவில் நஞ்சை பூமிகளில் தண்ணீரும் ஏற்ற எருவும் இருந்தால் விளைவு ஜாஸ்தி ஆகும் என்பதற்கு தடையில்லை. இதை அறிந்து ஜனங்கள் தங்கள் நிலங்களுக்கு எரு விட்டு தகுந்தலாபம் அடைவதோடு, பஞ்சம் நிவர்த்தி ஆகும்படியாக விளைவை அதிகரிக்கச் செய்வதற்கு ஒரு கலவை உரம் தஞ்சை ஜில்லாவிலேயே தயார்செய்து குடிகளுக்குக் கொடுக்க ஏற்பாடாயிருக்கிறது. இந்தக்கலவை உரமானது, தஞ்சை ஜில்லா பூமிகளில் குறைவு என்று சோதித்து அறிந்த பிரகாசதமிலம் (Phosphoric) நைட்ரஜன் (Nitrogen) என்னும் அம்சங்களை கணக்குப்படி இருக்கும்படி தயார்செய்து இருக்கிறார்கள். இந்த உரத்தின் விசேஷகுணம் என்னவென்றால் எருவிட்ட அந்தந்த

போகத்திலும் அடுத்த போகங்களிலும் எருச்சத்து இருக்கும்படியான வஸ்துக்கள் பலசேர்ந்திருக்கின்றன.

குடிகள் எல்லோரும் எளிதில்வாங்கி உபயோகப்படுத்தும்பொருட்டு, காவேரிப் பாசனமுள்ள முக்கியமான இடங்களில் டெப்போக்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் 13லக்ஷம் ஏகருக்கு மேல் நெல் சாகுபடியாவதால், சாதாரணமாய் கிராமங்களில் இருக்கக்கூடிய சாணி, சாம்பல், குப்பை, முதலிய எருக்கள் இதில் 10-ல் ஒருபங்குக்குகூட எருவிடப்போதாது. இதனால் குருவை சாகுபடி செய்யும் சொல்பநிலங்களைத் தவிர, பாக்கியிருக்கும் சம்பா நிலங்கள் பெருப்பாலும் எருக்காண்பதேயில்லை.

இதரதேசங்களுக்கு இதுவரையில் ஏற்றுமதியாய்ப் போய் அத்தேசங்களை செழிக்கச்செய்துகொண்டிருந்த மீன்எரு, புண்ணாக்கு, எலும்பு முதலிய எருவகைகள் நாட்டிலேயே உபயோகப்படும்பொருட்டும், ஜனங்களுக்கு உபகாரம் ஆகும்படிக்கும். இக்கலவை உரம் தயார்செய்திருப்பதால், இவ்வெருவை வாங்கி உபயோகப்படுத்தவேண்டியது. ஏற்கனவே செய்நேர்த்தியாய்க்கொண்டுவரும் குருவை நிலங்களை விட எருக்காணாத சம்பாநிலங்களில் அதிக பலனைத்தரும். ஆதலால் சம்பா நிலங்களுக்கு உபயோகிப்பது லாபகரமாயிருப்பதோடு அந்நிலங்கள் விருத்தியாகவு மிடமுண்டு. இதன் கிரயம் 150 ராத்தல் அடங்கிய மூட்டை 1-க்கு சாக்கு உள்பட கிடங்குவிலை ரூ 6—0—0 சாதாரணமாய் ஏகர் 1-க்கு 2 மூட்டை அல்லது 300 ராத்தல் (12 மணு) உபயோகப்படுத்தினால் போதும். நடவுக்கு முன் ஒரே நிதானமாய் விழும்படி இந்த எருவைத் தெளித்து உழுது நடவேண்டியது, இப்போது தானியங்களின் விலை அதிகமாயிருக்கின்றன. இந்தவிலை இன்னும் நீடித்திருக்கும். ஆகையால் மிராசுதார்கள் தானியப்பயிர்களுக்கு அதிலும் நெல்லுக்கு எருவிடுவதில் பணம் செலவு செய்வது லாபகரமாயிருக்கும்.

எரு கிடங்குகள்.

தஞ்சாவூர் திருக்காட்டுப்பள்ளி	மங்கநல்லூர் விவசாயப்பண்ணை
அய்யம்பேட்டை	பூந்தோட்டம்
பாபநாசம்	சென்னலூர் (நன்னிலம் ரயில்வே ஸ்டேஷன்)
கும்பகோணம் நாச்சியார்கோவில்	திருவாலூர்
திருவிடமருதூர்	கொரடாச்சேரி
ஆடுதுறை	நீடாமங்கலம்

குத்தாலம்	மன்னார்குடி
நல்லாவூர்	ஆவராணி (சிக்கல் ரயில்வே ஸ்டேஷன்வழி
மாயவரம்	திருத்துரைப்பூண்டி
சீயாழி	{ திருச்சினாப்பள்ளி
கொள்ளிடம்	

வேண்டிய மிராசுதார்கள் தங்களுக்கு சமீபமாய்இருக்கும் இடங்களில் வாங்கிக்கொள்ளலாம். இது விஷயமாக கடிதம் முதலியன எழுத விரும்புவோர்கள்,

1. திருச்சினாப்பள்ளி 5-வது இலாகா விவசாய அஸிஸ்டெண்டு டைரக்டர் அவர்களுக்காவது,

2. மாயவரம் விவசாய டிமான்ஸ்ட்ரேடர் அவர்களுக்காவது

3. திருவாரூர் ஷை யாருக்காவது எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மிராசுதார்கள் இப்போது கவர்மெண்டார் செய்யும் உதவியை தவறவிடாமல் முன் ஜாக்கிரதையாய் வாங்கி உபயோகிக்கவேண்டியது. இதனால் வெளியே போய்க்கொண்டிருக்கும் நல்ல உரங்கள் நமது நாட்டிலேயே இருந்துவருவதற்கு ஆஸ்பதமாயிருக்கும்.

திருச்சினாப்பள்ளி } ஏ. வி. திருமுருகநாதன் பிள்ளை,
20—8—19 } விவசாய அஸிஸ்டெண்டு டைரக்டர்.

சட்டிக்கலப்பை அல்லது "டிஸ்க்ப்ளௌ".

இவ்விராஜதானியிலுள்ள கரிசல்காடு (எரங்காடு) களில் உண்டாகும் களைகளில் தொலைக்கிறது மிகவும் கஷ்டமானது அருகு என்பது அது பெருகிவிட்டால் அதை ஒழிக்க அதிக செலவுபிடிக்கும் என்பதும் குடியானவர்கள் எல்லாருக்குமே தெரியும். தென் ஜில்லாக்களில் கடப்பாரைக்கொண்டு வேர்களைத் தோண்டியெடுப்பது வழக்கம். வட ஜில்லாக்களிலோ, கூலிக்காரர்கள் கிடைப்பது அரிதாகையால், ஆறு அல்லது அதற்கு அதிகமான ஜதை மாடுகளைப்பூட்டி இழுக்கக்கூடிய பெரிய மரக்கலப்பைகளைக்கட்டி உழுதுவருகிறார்கள். இதை இழுப்பது அதிக கஷ்டமாயிருந்தால் சுமார் 50 வருஷங்களுக்குமுன் நாலைந்து ஜதை யிழுக்கக்கூடிய இறக்கைவைத்த இரும்புக்கலப்பை ஒன்றை உபயோகப்படுத்திக் காட்டியதில், அது அவர்களுக்குப் பிடித்துவிட்டதால், பழைய கனத்த மரக்கலப்பையை அநேகமாய் விட்டுவிட்டு இதையே உபயோகப்படுத்தி வருகிறார்கள். இந்தப்படி ஆழ உழுவதானது கரிசல் மண்ணின் தன்மையையும், பருவத்தையும் பார்க்கும்

போது நல்ல கோடையிலேயே உழுதுமுடிக்கவேண்டியதாயிருக்கிறது. கோடைபிறக்கிறதற்கு முன்னேயே இக்கரிசல் நிலங்கள் காய்ந்து வெடித்துப்போகின்றன. இந்த வெடிப்பு அநேக இடங்களில் மிகவும் ஆழமாக வெடித்திருக்கும். இந்தப் பெரிய மாக் கலப்பையும் இரும்புக் கலப்பையும் ஆப்புவைத்து கெம்புவது (தென்னுவது) போல் வேலை செய்வதால் பெருத்த பெருத்த கட்டிகளைப் பேர்த்துத் தள்ளிவிடுகின்றன இதனால் உழுத நிலமெல்லாம் அதிக கரடுமுரடாய்ப்போய்விடுகின்றது. ஆகையால், இந்த உழவு மாட்டிற்கு அதிகப்பிரயாசை. உழவில் எழும்பிய கட்டியெல்லாம் வெய்யிலிலும் மழையிலும் கிடந்து தானாக பொடிபடுகிறபரியந்தம், புஞ்சையில் எவ்வித செய்நேர்த்தியும் செய்ய உதவாது. கோடை உழவு சரியாய்ச் செய்தால்தான் பூமியின் நய்ப்பு கெடாதிருக்குமென்று தெற்கத்திய சமுசாரிகளுக்குத் தெரியுமாகையால்இந்தப்படி ஆழ உழுதுவிட்டுவைப்பது ஒத்துவருகிறதில்லை தவிர வடக்கேயிருப்பதுபோல் இந்த நிலங்கள் அவ்வளவு பெருங் கரிசலல்ல அதனால்தான் தெற்கத்திய கரிசகாட்டு சமுசாரிக்கு இந்த இரக்கைவைத்த பெரிய கலப்பை பிடிக்கவேயில்லை.

சென்ற 5-வருஷங்களாக கோயில்பட்டி சர்க்கார் விவசாய பண்ணையில் “சட்டிக்கலப்பை” என்றும் “டிஸ்க்பிளௌ” என்றும் வழங்கும் கலப்பை ஒன்றை உபயோகித்துவருகிறார்கள், இது வேலைசெய்யும் விதமே வேறு நிலத்திற்குள் ஊடுருவிப்போக கொழு முனையைப்போல் ஒன்றும் இல்லை. விளிம்பு கத்திபோல் பதமாயிருக்கும் இரும்புச்சட்டியால்தான் கலப்பை செய்திருக்கிறது. இது கட்டிடவேலைகளில் சுண்ணாம்பு சுமந்துகொண்டுபோக வைத்திருக்கும் சட்டியைப்போலிருக்கும். கலப்பையின் கனம், அமுக்குவதினால் சட்டியின் பதமாயிருக்கும் விளிம்பு மண்ணை அறுத்துக்கொண்டுபோகிறது. இந்தச் சட்டியை ஒரு பக்கமாகத் திருப்பி அமைத்திருப்பதால் மண்ணைக் கிளப்பிவிடுகிறது. இவ்விதமாய்க் கிளப்பிவருகிற மண் எந்திறைற்போல் வைத்திருக்கும் ஒரு இரும்பு தகட்டை முட்டினதும் அது அதைப் புரட்டிவிடுகிறது. கலப்பைச்சக்கரம் வைத்திருப்பதாலும் இந்தச் சட்டிகளும் சுழன்றுவரும்படி அமைத்திருப்பதாலும் இழுப்பது மிக சுலபமாயிருக்குமென்பது விளங்கும். உழுதுவரும்போது மண்ணை சட்டிபோல் அறுத்துக் கிளப்பிவருவதால் மண் தன் படியே பொடியாய்விடுகிறது. இப்படி இரண்டு சட்டிவைத்த கலப்பையை இழுக்க நாலேர் மாடுகள் வேண்டும். அது ஏக காலத்தில் இரண்டு சால் உழுகும் அகலமாய் உழ சட்டிகளை அகற்றியும் வைத்துக்கொள்ளலாம். ஆழ உழவும் திருப்பிவைக்கவும் முடியும். 9 முதல் 10 அங்குல ஆழத்திற்கும் 18 அங்குல

அகலத்திற்கும், 6 முதல் 7 அங்குல ஆழத்திற்கும் 21 அங்குல அகலத்திற்கும் இரட்டைச்சால் உழும்.

இது விலை அதிகம். சண்டைக்குமுன் விலை கிட்டத்தட்ட இரு நூறு ரூபாய். அருகுமேகாண்டி சோதிப்பதற்குப் பிடிக்கும் செலவையும் அருகைக்கொல்லாமற்போனால் நிலம் ஒன்றுக்கும் உதவாமற்போய்விடும் என்பதையும் நினைத்துப்பார்க்கிறபோது, நிலத்தை சுத்தப்படுத்தும் அந்தக் கலப்பைக்குக் கொடுக்கும் தொகை அவ்வளவு பெரிதாக எண்ணுவதற்கில்லை. அநேக சமுசாரிகள் ஒன்றுசேர்ந்து பொதுவில் ஒரு கலப்பை வாங்குவது சுளுவாயிருக்கும். அல்லது ஒரு விவசாயக்கூட்டுறவு சங்கத்தில் ஒன்றை வாங்கி வாடகைக்கு விடுவதும் சலீசாக இருக்கும். திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கும் ஒரு சங்கத்தில் இதொன்றைவாங்கி கோடை பூராவும் இது தினந்தோறும் உபயோகத்திலிருந்துவருகிறது.

H. C. சாம்ஸன்,
விவசாய டிப்டி டைரெக்டர், 5, 7 சர்க்கில்,
கோயமுத்தூர்.

புண்ணாக்கு வகைகளை ஏற்றுமதிசெய்யாது தேசத்திலேயே நிறுத்திக்கொண்டு முன்னிலும் அதிகமாக உபயோகிக்கவேண்டும் என்பதற்கு நியாயம்.

குடியானவனுக்கும் மூலதனம் (கைம்முதல்) நிலம் பயிரிட்டு கந்தாயம் கூலிவகையராச் செலவுபோக மீதம் அவன் காலக்ஷேபத்திற்கு நிற்பதுதான் அதிலிருந்துவரும் வட்டி. அறிவுள்ள ஒரு குடியானவன் ஒரு வெள்ளாமை விளைவதற்கு அவசியமாயிருந்த பயிருணவுப் பொருள்களை திரும்பவும் நிலத்திலேயே போட்டு தனக்குவரும் லாபத்தை விருத்தி செய்வதிலேயே கருத்தாயிருப்பான். யூகமற்றவனோ ஒரு வெள்ளாமை எடுக்கும்போதே அப்பயிர் உட்கொண்ட பயிருணவையும் கொண்டுபோய்விடுவதால் செலவானதற்கு பர்த்திபண்ணாமல்போய் முதல் குறைந்துகொண்டுபோய் அதனால் ஆதாயமும் குறைந்துகொண்டேபோவதைக் கவனியாது வந்தோ வருகிற ஆதாயத்தைக் கொண்டு திருப்தியடைகிறான்.

நிலம் சொந்தமாய் வைத்துக்கொண்டு பண்ணையும் பார்த்து வருகிறவனுக்கு பின் சொன்னபடி இருந்துவருவது அறியாமை

யால் ஏற்பட்டாலொழிய அவன்மேல் பெருந் தப்பாகும். குறு
கிய காலத்திற்கு உயர்ந்த குத்தகைக்கு ஏற்றுக்கொண்டு பயிரி
டும் குடியை யாரும் குறைகூற நியாயமே இல்லை. செடிகள்வளர
இன்னின்ன வகை உணவுகள் வேண்டுமென்றும், பின் தானியம்,
பழம் முதலியது உண்டாய் முதிர்ந்து விளைய அவைகள் இன்னி
ன்ன இடத்திலிருந்து வந்து சேருகின்றன என்பதையும் கண்ட
றிய அநேக சாஸ்திர நிபுணர்கள் தங்கள் வாழ்நாள் முழுமையும்
கழித்திருக்கிறார்கள். ஒரு செடியைச் சுட்டால் நிற்கும் சாம்ப
லில் அடங்கியிருக்கும் மூலப்பொருள்கள் அவ்வளவும், நைட்ரோ
ஜன் என்னும் வெடி உப்பு வாய்வும் பூமியிலிருந்துதான் செடிக
ளுக்கு வருகின்றன. இவைகள் நீங்கலாக வேறு செடிக்குள்ளி
ருப்பது நீரும், எவைகளின் சேர்க்கையால் நீரும் ஆகாயமும்
ஆயிருக்கின்றனவோ அம்மூலப்பொருள்கள் சேர்ந்தான சேர்க்
கைப் பொருள்தான். ஆகலால் பின் சொன்னவைகளுக்காக செ
லவுசெய்து எருவிடவேண்டியதில்லை. இருந்தாலும் எல்லா எண்
ணெய் வகைகள், பஞ்சு, சர்க்கரை, குங்கிலிய வகைகள், கோந்து
தினுசுகள், ரப்பர், மாவு முதலிய மிகவும் விலைபெற்ற பொருள்
கள் பல இதற்குள் அடங்கிவிடுகின்றன தானியங்களிலும், கிழ
ங்குகளிலும் இருக்கும் முக்கிய உணவுப்பொருள் மாவு. செடி
கள் உண்டாய் வளர்ந்து இப்பொருள்களை யெல்லாம் தரவேண்டு
மானால் செடிகளுக்கு சாம்பலின் மூலப்பொருளும் வெடியுப்பு
வாய்வும் இன்றியமையாதன. இந்தப் பொருள்களும் நீரில் கரை
ந்து கலந்துபோகும் நிலைமையில் இருக்கவேண்டும்.

விதையிலிருக்கும் ஒவ்வொரு செடியும், வேர் உண்டாய் அதன்
மூலமாய் உணவுப்பொருள்களை பூமியிலிருந்து தாமே கிரஹித்துக்
கொள்ளும் சக்திவரும் வரையிலும், விதை முளைத்து ஒரு இளஞ்
செடி உண்டாவதற்கு போதுமான சாம்பலின் மூலப்பொருள்களை
யும் நைட்ரோஜன் என்னும் வெடியுப்பு வாய்வையும் உடனே உப
யோகப்படுத்திக்கொள்ளக்கூடிய நிலைமையில் விதையில் சேகரித்
துவைத்திருக்கின்றன.

ஆகலால் குடியானவன் தானியத்தையும் வித்து வகைகளை
யும் விற்கும்போதே மூலதனமாகிய, உபயோகத்திற்கு லாயக்கி
லிருக்கும் பயிருணவில் கொஞ்சத்தை விற்றுவிடுகிறான். நிலத்தி
லிருக்கும் அப்படிப்பட்ட பயிருணவிற்கும் ஒருவரையறையிருப்ப
தால் செலவழிந்த பொருளுக்கு பர்த்தியாக ஒரு வாயிலாக பர்த்
திபண்ணவேண்டும். இதுபோல ஒரு தேசத்தை மொத்தமாய்
எடுத்துக்கொண்டு பார்க்குபோது எந்த தானியங்களையும் வித்து
வகைகளையும் வெளிதேசத்திற்கு விற்கும்போதே தேசத்தின்
வளமாகிய மூலதனத்தின் ஒரு பகுதியை அத்தேசம் இழந்து

விடுகிறது. ஆனால் ஒரு குடியானவன் (பருத்தியை அரைத்து) பஞ்சைமட்டும் விற்பதாகவும், தைலவித்துக்களை ஆடி எண்ணையை விற்றுவிட்டு மீதமிருக்கும் பருத்திக்கொட்டை புண்ணாக்கு முதலியவைகள் எல்லாவற்றையும் அப்படியே ஆவது மாட்டிற்கும் போட்டு அதன் எருவாகவாவது திரும்பவும் அந்த நிலத்திற்கு உரமாகப் போடுவதாக வைத்துக்கொண்டால் உடனே உபயோகப்படக்கூடிய பயிருணவைச் சேர்க்கிறதால் மூலதனத்தைச் செலவழிக்காமல் அதற்கே பின்னும் கொஞ்சம் பொருளைச் சேர்த்து விருத்திசெய்வதுபோலாகிறது. இதுபோலவே பருத்திப் பஞ்சையும் எண்ணைகளையும் மட்டும் ஒரு தேசத்திலிருந்து விற்றுவருவதாயிருந்தால், அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய எருவிட வேண்டிய செலவேயில்லாதிருப்பதால் அத்தேசத்தின் செல்வம் விருத்தியாய்க்கொண்டிருக்கும். எந்த வெள்ளாமை எடுக்கிறோமோ அதையே திரும்ப நிலத்தில்போடுகிறது வழக்கத்திலில்லை. நிலக்கடலை (வேர்க்கடலை) பயிரிடுவதானால் அதில் வந்த புண்ணாக்கவ்வளவையும் அது விளைந்த நிலத்திற்கே போடுவதில் லாபமில்லை. அவைகள் சாதாரணமாய் மணற்பாங்கான செவ்வல் நிலங்கள். அது சில வருஷங்களில் விளையாமலேபோய்விடும். புண்ணாக்கைவிற்றுவரும் பணத்தைக்கொண்டு மாட்டெருவும் ஊர்க்குப்பையும் வாங்கலாம். அல்லது நஞ்சைக்கும் தோட்டங்களுக்கும் புண்ணாக்கைப் போட்டுவிட்டு தொழு எரு, குப்பை முதலியவைகளை அடுத்துவரும் நிலக்கடலைப் பயிருக்கு உரமாக உபயோகிக்கலாம்.

நல்ல வேளையாய் நம் இராஜதானியில் நாட்டில்விளையும் தானியம் பூராவிற்கும் நாட்டிலேயே செலவிருக்கிறது. ஆகையால் இத்தானியங்களிலடங்கியிருக்கும் பயிருணவு பூராவும் முடிவில் நிலத்திற்கே திருப்பிவிடுகிறது. ஆனால் தைலவித்துகள் சம்பந்தப்பட்டமட்டில் அவைகள் அநேகமாய் நாட்டிலிருந்து வெளிதேசங்களுக்கு ஏற்றுமதியாய்விடுகிறபடியால் அதிலடங்கியிருந்த பயிருணவவ்வளவும் நாட்டிற்கு நஷ்டமே. எண்ணை மட்டுமென்றால் பரவாயில்லை. ஏனெனில் மேலே சொல்லியபடி தண்ணீர் காற்று இவைகளில் அடங்கியிருக்கும் தாதுப்பொருள்களால்தான் எண்ணை ஆகிறது.

தனி எண்ணைக்குமட்டும் ஏற்றுமதி கிராக்கியில்லாமல் தைலவித்துக்கே ஏன் கிராக்கி இருக்கிறது? சென்னை இராஜதானியிலிருக்கும் குடியானவர்களைக் காட்டிலும் மற்ற நாட்டுக் குடியானவர்களுக்கு புண்ணாக்கின் அருமை விசேஷமாய்த் தெரிந்திருக்கிறது. சில புண்ணாக்குகளை நேராய் அப்படியே உரமாய்வைத்துவிடுகிறார்கள். மற்றவைகளை ஆடு மாடுகளுக்கு உணவாகப்போட்டு அதன் மூலமாய் அதன் எருவை சிலாக்கியமாக்கி நிலத்திற்கு

எருவிடுகிறார்கள். புண்ணாக்குக்கு அதிக விலைகொடுத்து வாங்குவதோடு அதன் ஏற்றுமதி செலவாகிய கப்பற் கேழ்வு முதலிய செலவுகளையும் அதன் வியாபாரிகளடையும் லாபத்தை அவர்கள் கொடுக்க இசைகிறார்கள்.

சென்னை ராஜதானியிலும் புண்ணாக்கு சிறந்த உரம் என்பதும் கால்நடைகளுக்கு நல்ல தீனி என்பதும் அநேக சமுசாரிகளுக்குத் தெரியும். இந்த விஷயங்களை ஏற்கனவே தெரியாதிருக்கும் குடியானவர்களும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் இக்குறி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நன்றாய் பாதுகாக்கப்பட்டுவரும் எருதுகளின் எரு ஐந்துவண்டி பாரத்திலடங்கியிருக்கும் பயிருணவு ஒரு பாரம் (500 ராத்தல் 20 மணங்கு முத்துக்கொட்டை அல்லது மணிலாக்கொட்டை (வேர்க்கடலை) புண்ணாக்கில் அடங்கியிருக்கிறதென்பதை யறியத்தக்கது.

(தொடரும்)

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. Rao Sahib C. R. Lakshmivaraha Ayyangar, B.A., B.L., & Mr. R. Srinivasa Ayyangar, B.A., for The Agricultural Association, No. 5, Cutchery Road Kumbakonam.